*Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 1689/2025***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-1 (LW-1)***

*Name / Father's Name:* ***திருமதி.கௌரியம்மாள் க/பெ. கோபி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **27.03.2026.**

துவக்க நேரம் 12.16 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்சமயம் தலைவாசல் காவல் நிலையத்தில் முதல் நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.11.2025 அன்று மதியம் 12.00 மணியளவில் நானும், என்னுடன் முதல்நிலைக்காவலர் திருமதி.செல்வி என்பவரும் தலைவாசல் காவல் உதவி ஆய்வாளர் திரு.மங்கையர்க்கரசன் அவர்கள் தலைமையில், மதுவிலக்கு குற்றத்தடுப்பு சம்மந்தமாக எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் தலைவாசல் காவல் நிலைய சரகம், மணிவிழுந்தான் காலனி, ராமசேஷாபுரத்தில் உள்ள எதிரியின் வீட்டின் அருகே கண்காணித்து சென்றபொழுது, அங்கிருந்த ஒரு பெண் எங்களை கண்டதும் அவரது வீட்டினுள் நுழைய முயற்சித்தவரை பிடித்து விசாரித்தோம்.

2) அப்போது அவர் அவரது பெயர் தனலட்சுமி க.பெ பிரபு என்று கூறினார். மேலும் அவர் வைத்திருந்த கட்டைப்பையை சோதனை செய்தபொழுது, அதில் சுமார் 180 ML அளவுகொண்ட Black Pearl Brandy – 08 பாட்டில்கள் இருந்தது. அதனால் எதிரி தனலட்சுமி என்பவரை, காவல் உதவி ஆய்வாளர் அன்றைய தினமே கைது செய்தார்.

3) பின்பு சம்பவ இடத்தில் எதிரி எடுத்து ஆஜர் செய்த Black Pearl Brandy – 08 பாட்டில்களை, அந்த இடத்தில் பொதுநபர் சாட்சிகள் யாரும் சாட்சி சொல்ல முன்வராத காரணத்தால் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில், காவல் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1–

வது கையெழுத்து என்னுடையதுதான். (**கைப்பற்றுதல் மகஜரில் உள்ள எனது 1–வது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4) பின்பு கைப்பற்றிய வழக்கு சொத்தை யாருக்கும் பயன்படா வண்ணம் காவல் உதவி ஆய்வாளர் சம்பவயிடத்திலேயே எங்கள் முன்னிலையில் கீழே கொட்டி தீ வைத்து அழித்து அழித்தல் மகஜர் தயார் செய்தார். அழித்தல் மகஜரில் உள்ள 1–வது கையெழுத்து என்னுடையது தான். (**அழித்தல் மகஜரில் உள்ள எனது 1–வது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பிறகு எதிரியின் மீது வழக்கு பதிவு செய்ய, காவல் உதவி ஆய்வாளருக்கு நானும் உதவியாக இருந்தேன். காவல் உதவி ஆய்வாளர், என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) நான் சொல்லும் சம்பவயிடமானது மக்கள் நடமாட்டமான பகுதி என்றால் சரிதான். தனிநபர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். கைப்பற்றியதாக சொல்லப்படும் பாட்டில்களை வைத்திருந்த கட்டைப்பையை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியதாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். இரசாயன பகுப்பாய்விற்காக ஏதேனும் மாதிரிகளை எடுத்து வைத்தோமா என்றால் இல்லை. என் முன்பாக சம்பவயிடத்தை காட்டக்கூடிய பார்வை மகஜரோ, மாதிரி வரைபடத்தையோ சார்பு ஆய்வாளர் தயாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். கைப்பற்றியதாக சொல்லும் சாராயத்தை எங்கு அழித்தோம் என்றால் சம்பவயிடத்தில்தான் அழித்தோம்.

2) நான் சொன்னவாறு சொன்ன தேதி மற்றும் நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரியை பார்க்கவில்லை என்றும், எதிரியிடமிருந்து எந்த பாட்டில்களையும் கைப்பற்றவில்லை என்றும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரியின் மீது போடப்பட்ட பொய்யான வழக்கிற்காக, காவல் உதவி ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றும், வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், வழக்கிற்காக சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்டதாக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 12.28 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.03.27 16:16:02 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.: **CC.1689/2025***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court **PW-2 (LW-3)***

*Name / Father's Name: **திரு.மங்கையர்க்கரசன் த/பெ. காசிக்கவுண்டர்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **27.03.2026.**

துவக்க நேரம் 12.29 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்சமயம் தலைவாசல் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.11.2025 அன்று மதியம் 12.00 மணியளவில் நானும், எனது தலைமையில் என்னுடன் முதல்நிலைக்காவலர்கள் திருமதி.செல்வி மற்றும் திருமதி.கௌரியம்மாள் ஆகியோர்களுடன் மதுவிலக்கு குற்றத்தடுப்பு சம்மந்தமாக எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் தலைவாசல் காவல் நிலைய சரகம், மணிவிழுந்தான் காலனி, ராமசேஷாபுரத்தில் உள்ள எதிரியின் வீட்டின் அருகே கண்காணித்து சென்றபொழுது, அங்கிருந்த ஒரு பெண் எங்களை கண்டதும் அவரது வீட்டினுள் நுழைய முயற்சித்தவரை பிடித்து விசாரித்தோம்.

2) அப்போது அவர் அவரது பெயர் தனலட்சுமி க.பெ பிரபு என்று கூறினார். மேலும் அவர் வைத்திருந்த கட்டைப்பையை சோதனை செய்தபொழுது, அதில் சுமார் 180 ML அளவுகொண்ட Black Pearl Brandy – 08 பாட்டில்கள் இருந்தது. அதனால் எதிரி தனலட்சுமி என்பவரை அன்றைய தினமே கைது செய்தேன்.

3) பின்பு சம்பவ இடத்தில் கட்டைபையிலிருந்து எதிரி எடுத்து ஆஜர் செய்த Black Pearl Brandy – 08 பாட்டில்களை, அந்த இடத்தில் பொதுநபர் சாட்சிகள் யாரும் சாட்சி சொல்ல முன்வராத காரணத்தால் என்னுடன் வந்த போலிஸ் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி, சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். (**கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4) பின்பு கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை யாருக்கும் பயன்படா வண்ணம் என்னுடன் வந்த போலிஸ் சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்திலேயே கீழே கொட்டி தீ வைத்து அழித்து, அழித்தல் மகஜர் தயார் செய்து, சாட்சிகளிடம் கையெழுத்து பெற்றேன். (**அழித்தல் மகஜர் அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

5) பிறகு எதிரியுடன் நிலையம் வந்து எதிரியின் மீது நிலைய குற்ற எண்.448/2025 சட்டப்பிரிவுகள் 4(1)(C) of TNP (Amendment) Act 2024-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. சம்பவம் முதற்கட்ட விசாரணையில் உண்மையென தெரியவந்ததால் எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன். பிறகு வழக்கு விசாரணையை முடித்து சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1) நான் சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் மக்கள் வசிப்பிட பகுதி என்றால் தூரதூரமாக வீடுகள் உள்ளன. தனிநபர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவ இடம் மக்கள் நடமாட்டமான பகுதி என்றால் சரிதான். சம்பவம் இடம் தொடர்பாக பார்வை மகஜர், மாதிரி வரைபடம் எதுவும் தயார் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) கைப்பற்றியதாக சொல்லப்படும் சாராயத்தை, அளந்து பார்த்தோமா என்றால் இல்லை, தோராயமாக கூறியுள்ளோம். இரசாயன பகுப்பாய்விற்காக ஏதேனும் மாதிரிகளை எடுத்து வைத்தோமா என்றால் இல்லை. கைப்பற்றியதாக சொல்லப்படும் சாராய பாட்டில்கள் வைத்திருந்த கட்டைப்பையை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை அழிக்க எனக்கு சட்டப்படி அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல.

3) நான் சொன்னவாறு சொன்ன தேதி மற்றும் நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரியை பார்க்கவில்லை என்றும், எதிரியிடமிருந்து எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரியின் மீது பொய்யாக வழக்கு பதியப்பட்டுள்ளது என்றும், வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், வழக்கிற்காக சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 12.41 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.03.27 16:16:34 +0530

Judicial Magistrate No.2, Attur.